அவர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, செயின்ட் ஜோஸப் கல்லூரி நிர்வாகத்திடமிருந்து கொஞ்சம் இடம் வாங்கி, இதை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, சிந்தாமணி சாலையில் இருப்பது ஆங்காங்கு உள்ள பஸ் ஸ்டாப்புகள். அங்கே பஸ்கள் நிற்கும், போகும். ஆனல் பஸ் ஸ்டாண்டு அல்ல. ஆனல், இப்பொழுது கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையின்படி சிந்தாமணியில் திருச்சி-கரூர் சாலைக் கருகில் S. No. 539 (part), 538 (part), 537-1 (part), 537-2 (part), Ward No. 5, Block No. 9. எண்ணில் அரசாங்கத்தினல் அக்வையர் செய்யப்பட்டு, அதில் என்ன வேலைகள் செய்யலாம் என்பதைப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிருேம். அந்த நேரத்தில் அதுவும் கவனிக்கப்படும்.

உதகை நகருக்குப் புதிய பேருந்து நிலையம்

*284 வின—திரு. கு. அ. பொம்மன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகை நகரத்தில் புதிய பேருந்து நிலையம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான வேலை எப்போது தொடங்கப் படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) முறைப்படியானவைகளை அனுசரித்து பின் வேலை துவங்கப்படும்.

திரு. கு. அ. பொம்மன்: இந்த வேலைகள் எப்பொழுது துவங்கப் படும், எப்பொழுது முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இந்த வேலைக்கு ஏற்கனவே ரூ. 3,53,000 செலவில் ஊட்டி நகாட்சியில் ஒரு மத்திய பேருந்து நிலையம் கட்டுவதற்கான கருத்து ஒன்று இருக்கிறது. செலவின் மதிப்பீடு ரூ. 5 லட்சத்திற்குக் குறைவாக இருப்பதால் கட்டிட தலைமைப் பொறியாளர் அவர்களே தொழில் நுட்ப ஒப்பளிப்பு அளித்துள்ளார்கள். ஒப்பந்தப்புள்ளிகள் கேட்ட போது ஒருவர் மட்டுமே முன் வந்தார். இந்த ஒப்பந்தப் புள்ளித்

1973 நவம்பர் 21]

தொகை மதிப்பீட்டை விட 25.2 விழுக்காடு அதிகமாக இருந்ததால் ஒப்பந்தப் புள்ளி நிராகரிக்கப்பட்டது. இரண்டாம் முறையாக ஒப்பந்தப் புள்ளிகள் கேட்டபோது, ஒருவரும் கேட்க முன்வரவில்லை. எனினும் ஊட்டி நகராட்சி ஆணையர் ஒப்பந்தப் புள்ளிகள் மறுபடியும் கேட்கத் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

வடார்க்காடு மாவட்டத்தில் நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்து வழித்தடங்கள்

*285 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-ம் ஆண்டில், வடார்க்காடு மாவட்டத்தில் அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து வழித்தடங்கள் எத்தனை ?

(இ) அந்த வழித் தடங்களில் அரசு பேருந்துகள் விடப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 14 வழித் தடங்கள்.

(இ) ஆம்.

திரு. கே. ஏ. வகாப் : அரசுடைமையாக்கப்பட்ட சில வழித் தடங்களில் சில தனியார் பஸ்கள் மறுபடியும் ஓடுகின்றன. அதற்குக் காரணம் என்ன ? இப்பொழுது எடுத்துக்கொள்ளப்பட்ட தனியார் பேருந்துகளுக்குப் பதிலாக விடும் அரசு பஸ்கள் மிகவும் பழமையானவாக இருக்கின்றன, குறிப்பாக சென்னை-வேலூர், வந்தவாசி-வேலூர் பஸ்கள் மாற்றப்பட்டு புதிய பஸ்கள் போடுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நாட்டுடமையாக்கப்பட்ட வழித் தடங்களில் மறுபடியும் தனியார் பஸ்கள் ஓடுவது கோர்ட்டாரின் தயவினாலே தவிர, அரசாங்கத்தினால் அல்ல. புதிய பஸ்களை விடுவது பற்றி எவ்வளவு தூரம் நடவடிக்கை எடுக்க முடியுமோ அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.